# பட்டயம்


மலர் - 08 நவம்பர் - 2011 இதழ் - 1

Date of Issue : 01-11-2011

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 8

Issue : 1 Price Per Copy : Rs.5.00


## ஜெப மலர்




அதிசயங்கள் செய்யும் கர்த்தாவே! (யோபு. 5/9)

COME AS A WONDERFUL LORD! (JOB 5/9)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# ஆசிரியர் கடிதம்

சேனைகளின் தேவன் நம்மோடு இருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் - சங் 46/1

தேவன் நமக்கு அடைக்கலமாக இருக்கிறார். சிலர் பணத்தை நம்பியிருக்கிறார்கள். பணத்தை மட்டும் வைத்து நாம் பிழைக்க முடியாது. ஆபத்து காலத்தில் ஆண்டவர் தான் நமக்குத் துணை. ஜீவனுள்ள தேவனை நாம் சார்ந்து கொள்வோமானால் பெருவெள்ளம் வந்தாலும், அதற்கு நம்மைத் தப்புவிப்பார். ஏனென்றால் நமக்கு துணை. ஆண்டவர் மட்டுமே. அவரை நம்புகிறவர்களுக்கு அவர் ஆபத்து காலத்தில் துணையாக இருக்கிறார். பேராபத்துக்களைக் குறித்தும், வெள்ளத்தைக் குறித்தும், கொள்ளை நோய்களைக் குறித்தும் பயப்பட வேண்டாம்.

ஆண்டவர் நமக்கு நல்லவர், அவர் நம்மை சந்தோஷிப்பிப்பார். அதிகாலையில் நமக்கு அவர் சகாயம் பண்ணுவார். கொடிய பிசாசுகள் நம்மோடு போராட வரும் போதும் ஆண்டவர் நமக்காக யுத்தம் பண்ணுவார். சாத்தான் என்ன செய்தாலும் நம் ஜீவன் அவன் கையில் இல்லை. ஆகவே கொடிய சாத்தானுக்குப் பயப்படாதிருங்கள். பிரமாணத்தின்படி வாழுங்கள். அவர் பிரமாணத்திற்கு அப்படியே கீழ்படியும் போது நம்மை ஆசீர்வதிப்பார். 7 வழியாகச் சென்றால் அவர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. அவர் பிரமாணங்களின் படி நடந்தால் நிச்சயமாக அவர் வார்த்தையின்படி நமக்குச் செய்வார். பிரமாணத்திற்குக் கீழ்படியும் போது அவர் இரக்கம் நமக்கு நிச்சயம் கிடைக்கும். அவர் கட்டளைகளுக்குக் கீழ்படிய வேண்டும். ஜெபித்தால் மட்டும் போதாது; கீழ்படிதலும் வேண்டும். கீழ்படியாமல் ஜெபித்தால் எந்த பிரயோஜனமும் இல்லை.

ஆண்டவர் கட்டளைகளுக்கு நாம் முழுமையாகக் கீழ்படிய வேண்டும். கீழ் படி இல்லாமல் மேல் படி இல்லை. எவ்வளவுக் கெவ்வளவு அவர் கட்டளைக்குக் கீழ்படிகிறோமோ அவ்வளவாய் நாம் வெற்றி பெறுவோம். அவரையே துணையாக, அடைக்கலமாகக் கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

(ஆமென்.)

## தற்பரிசோதனைக் கேள்விகள்

**525.** பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்த ஆராதனையை தேவனுக்கு செலுத்துகிறாயா? - எபி 8/5

**526.** தினமும் தேவனைத் தொழுது கொள்கிறாயா? - எபி 9/6

**527.** உன் மனச்சாட்சி சுத்தமாக இருக்கிறதா? - எபி 9/14

**528.** பரிசுத்தத்தில் பூரணப்பட வாஞ்சிக்கிறாயா? - எபி 10/14

**529.** ஆண்டவர் தமது பிரமாணங்களை நம் இருதயத்தில் வைத்து, நம் மனதில் எழுதும்படி ஜெபித்ததுண்டா? - எபி 10/16

**530.** துர்மனச்சாட்சி இல்லாத இருதயம் உண்டா? - எபி 10/22

**531.** ஞானஸ்நானம் மூலம் கழுவப்பட்டிருக்கிறாயா? - எபி 10/22

**532.** ஞானஸ்நானம் பெற்றபின், சுத்த ஜலமாகிய வேதவசனம், உன்னை கழுவும்படி இடம் கொடுக்கிறாயா? - எபி 10/22

**533.** உன் இருதயத்தில் உண்மை உண்டா? - எபி 10/22

**534.** விசுவாசத்தில் பூரண நிச்சயத்தோடு இருக்கிறாயா? - எபி 10/22

**535.** வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்பதை விசுவாசிக்கிறாயா? - எபி 10/23

**536.** உன் நம்பிக்கை அறிக்கையிடுவதில் உறுதியாய் இருக்கிறாயா? - எபி 10/23

**537.** அன்பினால் நற்கிரியை செய்கிறாயா? - எபி 10/24

**538.** சபை கூடி தேவனை ஒழுங்காக ஆராதிக்கிறாயா? - எபி 10/25

**539.** உபத்திரவங்களைப் பொறுமையோடு சகிக்கின்றாயா? - எபி 10/32

**540.** பரலோகத்தில் நிலையான சுதந்தரம் பெறுவோம் என விசுவாசித்து பொறுமையாய் இருக்கிறாயா? - எபி 10/34, 36

## ஜெபம்

### 1. சமாதான கர்த்தராய் வாரும் தேவா!

1. சமாதான பிரபுவே! ஸ்தோத்திரம். கர்த்தாவே! உலகம் தரக்கூடாத சமாதானம் தர வல்லவரே! ஸ்தோத்திரம். கர்த்தாவே! உம்மை நோக்கித் திரும்புகிறேன். என் வாழ்க்கையில் பணம், பொருள், பட்டம், பதவி, நண்பர்களால் பெற்றுக் கொள்ள முடியாத உம்முடைய சமாதானத்தை எமக்குத் தந்தருளும். - யோ 14/27

**2.** கர்த்தாவே! எவ்வளவு கற்றிருந்தாலும் அக்கல்வியால் சமாதானம் பெற முடியாது என்பதை அறிந்திருக்கிறேன். உம்முடைய பிள்ளையாய் என்னை மாற்றி உம் சமாதானம் எனக்குள் தந்திடும். - □ கொரி 1/27

**3.** கர்த்தாவே! சமாதானத்தை நதி போல் ஊற்ற வல்லவரே! ஸ். என் உள்ளத்துக்குள்ளும் என் இல்லத்துக்குள்ளும் என்னைச் சுற்றிலும் அளவில்லாத சமாதானம் தந்திடும். - ஏசாயா 66/12

**2. பிரபுவாய் எனக்கு வாரும் கர்த்தாவே!**

**1.** ஐசுவரியசம்பன்னரே! பிரபுவே! ஸ்தோத்திரம். என் வீட்டுத் தேவைகள், தொழில் தேவைகள், ஊழியத் தேவைகள் எல்லா வற்றையும் அற்புதமாய் சந்தியும். என் கடன்களையெல்லாம் மாற்றும் - ரோமர் 10/12

**2.** சமாதான பிரபுவே! ஸ்தோத்திரம். எங்கள் ஊரிலும் நாட்டிலும் உலகத்திலும் சமாதானம் பெருகப் பண்ணும் - ஏசாயா 9/6

**3.** ஜீவ பிரபுவே! ஸ்தோத்திரம். எம் ஜீவனை உம் இரத்தத்தால் மூடி வியாதி, விக்கினம், பிசாசு, சத்துருக்கள், விஷங்கள் மேற்கொள்ளக் கூடாதபடி காப்பாற்றும் - கொலோ 3/3

**4.** இஸ்ரவேலை ஆளும் பிரபுவே! ஸ்தோத்திரம். எம்மை ஆள்பவராய் வாரும். எம்மைக் கண்ணோக்கி சாத்தானின் ஆளுகைகள், சத்துருக்களின் ஆளுகைகள் அந்தகாரலோகாதிபதிகளின் ஆளுகைகள் எம்மேல் வாய்க்காதபடி மறைத்துக் காப்பாற்றும் - மத் 2/6

**3. என்னை ஆவிக்குரிய இஸ்ரவேலனாய் மாற்றும்**

**1.** கர்த்தாவே! இடைவிடாமல் ஜெபிப்பவனாய் (யாக்கோபைப் போல) என்னை மாற்றும். அதனால் சத்துருக்களும், சாத்தானும் என்னை மேற்கொள்ள முடியாமல் தோற்றுப்போவார்களாக - I தெச 5/17

**2.** யாக்கோபை லாபானும் ஏசாவும் மேற்கொள்ள முடியவில்லையே! அதைப் போல் பாவிகள் எம்மை மேற்கொள்ள விடாதேயும் - ஆதி 31/24

**3.** எம்மை ஆவிக்குரிய இஸ்ரவேலராய் மாற்றி மந்திரவாதம், குறிசொல்லுதல் தோற்றுப்போகப் பண்ணும் - எண் 23/23

4. கர்த்தாவே! தானியேலைப் போல் ஜெபவீரனாய் மாற்றி சிங்கங்கள் (அசுத்த ஆவிகள்) மேற்கொள்ளாதபடி காப்பாற்றும் - தானி 6/10

5. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போல ஆவிக்குரிய இஸ்ரவேலராய் மாற்றி அக்கினி சோதனைகளுக்குத் தப்புவியும் - தானி 3/27

## 4. ஜீவாதிபதியாய் செயல்படும் கர்த்தாவே

1. கர்த்தாவே! ஜீவாதிபதியே! ஸ். என் ஜீவனுக்கு அதிபதியாய் இருப்பவரே! என் ஜீவனை உம்முடனே தேவனுக்குள் மறைத்துக் கொள்ளும் - அப் 3/15

2. என் ஜீவனை உம் இரத்தத்தால் மூடிக் கொள்ளும். - யோபு 2/6

3. என் ஜீவனை உம் கையில் வைத்துக் கொள்ளும். ஒருவனும், சாத்தானும் அதை உம் கையிருந்து பறித்துக் கொள்ளாது காத்துக் கொள்ளும் - யோ 10/28

4. கர்த்தாவே! எம் ஜீவனை சாத்தான், சத்துரு, வியாதி, ஆபத்து, பேராபத்துகள், விஷங்கள், விஷஜந்துக்கள் தொடாதபடி பாதுகாத்திடும் - கொலோ 3/3

5. உம் ஜீவன் எம் ஜீவனுக்கு ஒளியாயிருப்பதாக - யோ 1/4

6. கர்த்தாவே! என் ஜீவனின் பெலனாய் வாரும். எம் ஜீவனை எதுவும் முறிக்காதபடிக்கு பெலப்படுத்தும். - சங் 27/1

7. கர்த்தாவே! எம் ஆவி, ஆத்மா, சரீரம், ஜீவன், மனசாட்சி, உள்ளிந்திரியம், உள்மனம், வெளிமனம், ஆழ்மனம், சிந்தை, செயல்கள் யாவும் காத்திடும். - யூதா 24

## 5. இப்படிப்பட்டவனாக மாற்றும்

1. ஜீவபயாய் என்னை ஒப்புக்கொடுப்பேனாக. வாழ்விலும் தாழ்விலும்; உம்மைப் பற்றுவேனாக. உம் சித்தம் செய்வேனாக. - ரோமர் 12/1

2. என்னையும் எனக்கு நீர் தந்த யாவையும் உம்மிடத்தில் முற்றிலும் ஒப்படைப்பேனாக. - ரோமர் 12/1

3. அடைக்கலப்பட்டணமாகிய உமக்குள் இருப்பேனாக - எண் 35/6

4. உம் பாதத்தில் எப்போதும் உம் இரக்கத்திற்காகக் காத்திருப்பேனாக - லூக். 10/39

5. உம் கிருபையினை சார்ந்து அதனாலேயே வாழ்வேனாக -சங் 63/3

6. உம்மிடத்தில் ஆபத்து வேளைகளில் பண்ணின பொருத்தனை களை நிறைவேற்றிட எனக்கு உதவி செய்யும் - பிரசங்கி 5/4

7. கர்த்தாவே! உமக்கென்று நான் அர்ப்பணம் செய்த காரியங்களை நிறைவேற்றுவதில் உண்மையும் உறுதியும் உள்ளவனாக மாற்றும் - பிரச 5/4,5

8. பக்தியுள்ளவனாக மாற்றி உமக்கென்று தெரிந்து கொள்ளும்-சங்4/3

ஆமென்!

**6. காற்றையும் கடலையும் கண்டு அவிசுவாசப்படாதிருப்பேனாக.**

1. கர்த்தாவே! என் வாழ்க்கைப் படகிலே வாரும். நீர் என் வாழ்க்கைப்படகிலே இருப்பதனால் எந்த காற்றையும் கடலையும் கண்டு பயப்படாதிருப்பேனாக; அவிசுவாசப்படாதிருப்பேனாக; முறுமுறுக்காதிருப்பேனாக; பின்வாங்கிப் போகாதிருப்பேனாக; மறுதயாது இருப்பேனாக - மாற்கு 4/37-40

2. இஸ்ரவேன் தேவனே! நீர் எமக்காக எப்போதும் பிதாவிடம் வேண்டிக் கொள்பவராயிருக்கிறீர் என்பதை விசுவாசிப்பேனாக - ரோமர் 8/34

3. இயேசுவே! நீர் இயற்கை, செயற்கை, காற்று, கடல், துன்மார்க்கர், சாத்தான், விஷங்கள், விஷஜந்துக்கள், மரணம், ஜீவன் மேல் அதிகாரம் உள்ளவர் என்பதை நம்புவேனாக - மத் 28/18

4. கர்த்தாவே! நீர் தூங்குவதுமில்லை; உறங்குவதுமில்லை; தாங்குபவர்; தப்புவிப்பவர் என்று விசுவாசிப்பேனாக - சங் 121/3,4

**7. உம் இரக்கத்தையே நம்புவேனாக**

1. கர்த்தாவே! உம் இரக்கங்களை பெரிதாக எண்ணுவேனாக. என்னுடைய கிரியைகள், பரிசுத்தம், நீதி, ஒப்புக்கொடுத்தல், ஜெபம், உபவாசம், காத்திருத்தல் எதையும் பெரிதாக எண்ணாமல் உம் இரக்கத்தையே பெரிதாக எண்ணுவேனாக - சங் 63/3

2. பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று எப்போதும் என்னைத் தாழ்த்துவேனாக - லூக்கா 18/13

3. உம் இரக்கத்தைப் பெற்றுக் கொள்ள எப்போதும் உம் பாதத்தில் காத்திருப்பேனாக - லூக் 10/42

4. கர்த்தாவே! முடிவில்லா இரக்கங்கள், ஆயிரம் தலைமுறை இரக்கங்கள், நித்தியமான இரக்கங்கள், பரிபூரண இரக்கங்கள், அதிசயமான இரக்கங்கள், தாவீதுக்கருளின இரக்கங்கள், உடன்படிக்கையின் இரக்கங்கள், ஜீவனைப் பார்க்கிலும் பெரிதான இரக்கங்கள் எமக்குக் கிடைப்பதாக. - யாத் 20/6

**8. மரியாள்களைப் போல் மாற்றும்**

1. லாசருவின் சகோதரியாகிய மரியாள் : இவள் பரிமளதைலத்தை உம் பாதங்களில் பூசி துடைத்தாள். அதைப் போல் என்னைத் தாழ்த்துவேனாக உம்மை உயர்த்துவேனாக - யோ 12/1-3

2. மகதலேனா மரியாள் உம் பாதங்களைத் தழுவினாள். கர்த்தாவே உம் பாதங்களை எப்போதும் தழுவுவேனாக - மத் 28/9

3. பாவியான ஸ்திரி (மனந்திரும்பிய) மனங்கசந்து அழுது உம் பாதத்தில் கண்ணீர் வடித்தாள்; தலைமயிரால் துடைத்து தன்னைத் தாழ்த்தினாள்; பாதங்களை ஓயாமல் முத்தம் செய்தாள்; பரிமளதைலம் பூசினாள். அதைப் போல் நான் மனந்திரும்பி அழுது பாவ அறிக்கை செய்வேனாக; தாழ்த்துவேனாக; உம்மை ஓயாமல் ஸ்தோத்திரிப்பேனாக; உம்மை ஓயாமல் மகிமைப்படுத்துவேனாக - லூக்கா 7/37,38

**9. பாதத்தை அண்டிக்கொள்வேனாக**

1. கர்த்தாவே! உம் பாதத்தில் அமர்வோம் (லாசருவின் சகோதரி போல்) - லூக்கா 10/39

2. உம் பாதத்தில் விழுவோம் (லாசருவின் சகோதரி போல்). உம் பாதத்தில் கண்ணீர் வடிப்போம் (பாவியான ஸ்திரி போல் - லூக் 7/38

3. உம் பாதத்தினைத் தொழுவோம் (யோசேயின் தாயாகிய மரியாளினைப் போல்) - மத் 26/7

4. சுகம் பெறும்வரை உம் பாதத்திலே காத்திருப்போம் - யோ 5/2- 4

5. கர்த்தாவே! என்னை விட்டு எடுபடாத நல்ல பங்காய் வாரும் - லூக் 10/42

6. கர்த்தாவே! இரக்கங்கள் தொடர்ந்து கிடைக்கத் தக்கதாக எப்போதும் உம் பாதத்திலே காத்திருப்பேன் ; இரங்கும் - லூக் 10/42

7. கர்த்தாவே! கிருபையின் தேவா! ஆசீர்வாதத்தின் ஊற்றே! ஆவியின் ஊற்றே! ஞானத்தின் ஊற்றே! கிருபை, ஆசீர், ஆவி, ஞானம் ஊற்றும் - யோ 7/38,39

8. பாதத்தில் விழுகின்ற எம் மேல் கரம் வைத்து ஆசீர்வதிக்கவே ஆசீர்வதியும் - மத் 28/9,10

**10. ஒத்தாசை உம்மிடமிருந்து வருவதாக**

1. கர்த்தாவே! உம் கண்கள் (7) எம்மை நோக்குவதாக - II நாள 16/9
2. உம் கண்களினின்று இரக்கம் கிடைப்பதாக. -
3. உம் கண்கள் வைத்து ஆலோசனை சொல்லும் - சங் 32/8
4. உம் கண்களின் அக்கினியை அனுப்பும் - வெளி 1/14
5. உம் வாயின் சுவாசத்தை அனுப்பும் - II தெச 2/8
6. உம் வாயின் பட்டயம் அனுப்பும் - வெளி 1/16
7. உம் நாசியின் சுவாசம் அனுப்பும் -
8. உம் வார்த்தையை அனுப்பும் - சங் 107/20
9. உம் வாக்கின் கோலை அனுப்பும் - ஏசா 11/4
10. உம் வசனத்தை அனுப்பும் - சங் 107/20
11. உம் வாயின் அக்கினி அனுப்பும் - சங் 18/8
12. உம் வலக்கரம் நீட்டும் - மத் 8/3
13. உம் 8 பட்டயங்களை அனுப்பும் - வெளி 2/12
14. உம் நீதியின் செங்கோலை அனுப்பும் - சங் 45/6
15. உம் ஆவியை அனுப்பும் -
16. உம் அக்கினியை அனுப்பும் - புலம 1/13
17. உம் வெளிச்சத்தை அனுப்பும் - சங் 43/3

18. உம் வல்லமையின் செங்கோலை அனுப்பும் - சங் 110/2

19. உம் தூதர்களை அனுப்பும் - தானி 3/28

20. உம் மகிமையை அனுப்பும் - சங் 108/5

**11. மனக்கண்களைத் திறந்தருளும்.**

1. கர்த்தாவே! அநேக ஜனங்கள் மெய்தேவனாகிய உம்மை அறியமுடியாதபடி சாத்தான் அவர்கள் மனக்கண்களைக் குருடாக்கி வைத்துள்ளான். கர்த்தாவே! கண்களைத் திறந்தருளும்-II கொரி 4/4

2. அந்திகிறிஸ்துக்கள், கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ளப் போதகர்கள், கள்ளசகோதரர்கள், கள்ளகிறிஸ்துக்கள் பின்னால் அறியாமையால் போகிற ஜனங்களின் கண்களைத் திறந்தருளும் - II பேதுரு 2

3. பொய்யான அற்புதங்களைக் கண்டு கள்ள ஊழியர்களின் பின் செல்கிற ஜனங்களின் மனக்கண்களைத் திறந்தருளும் - II பேதுரு 2

4. அந்தகாரலோகாதிபதிகளுக்கு ஒத்தாசை செய்யும் அசுத்த ஆவிகளால் வஞ்சிக்கப்பட்டு அவர்களுக்கு வாக்களிக்கின்ற அறியாத ஜனங்களின் கண்களைத் திறந்தருளும் - எபேசியர் 6/12

5. உம் இரகசியங்களை கண்டுணர எம் ஆவிக்குரிய கண்களைத் திறந்தருளும் - சங் 146/8

**12. கர்த்தாவே! மறைத்திடும்**

1. கர்த்தாவே! அடியேனை ஆவியினால் பிறந்தவனாய் மாற்றி தொடர்ந்து வரும் சத்துருவுக்கும் சாத்தானுக்கும் மறைத்திடும் -யோ 3/6

2. உம் கூடாரமறைவில் என்னை ஒளித்து வைத்துக் காப்பாற்றும் - சங் 27/5

3. உயர்ந்த அடைக்கலத்தில் வைத்திடும் - சங் 18/2

4. உம்முடைய நிழல் வைத்திடும் - சங் 91/1

5. உன்னதமானவரே! உம் மறைவில் வைத்திடும் - சங் 91/1

6. கன்மலை வெடிப்பில் வைத்திடும் - உன் 2/14

7. உம் விலாவின் மறைவில் வைத்திடும் - சங் 51/1

8. உம் வெளிச்சத்தின் வெளிச்சத்தில் வைத்திடும் - சங் 36/9

9. உம் உள்ளங்கைக்குள் வைத்திடும் - ஏசா 49/16

10. உம் ஆவிக்குள் வைத்திடும் - யோ 3/8

11. உம் இரத்தத்துக்குள் வைத்திடும் - I பே 1/2

12. உம் அக்கினிக்குள் வைத்திடும் - II இ. 6/17

13. உம் மகிமைக்குள் வைத்திடும் - ஏசாயா 4/5

14. உம் தூதர் சேனைக்குள் வைத்திடும் -

15. உம் ஒளிப்பிடத்தில் வைத்திடும் - சங் 27/5

**13. கர்த்தாவே! கண்ணோக்கும்**

1. கர்த்தாவே! ஆகாரைக் கண்ணோக்கினீரே! என்னைக் கண்ணோக்கும். லகாய் ரோயீயாக வெளிப்படும் - ஆதி 10/13

2. கர்த்தாவே! ஆகாரின் பிள்ளையைக் கண்ணோக்கி பிழைக்கச் செய்தீரே! பிள்ளையைக் காண்பவராய் வெளிப்படும் - ஆதி 21/17

3. ஆபிரகாமுக்கு யெகோவாயீரேயாக (எல்லாம் காண்பவராக, எல்லாம் பார்த்துக் கொள்பவராக) வெளிப்பட்டீரே! எமக்கும் அவ்வாறு வெளிப்படும் - ஆதி 22/14

**14. கண்களைத் திறந்தருளும் கர்த்தாவே**

1. கர்த்தாவே என் ஆவிக்குரிய கண்களைத் திறந்தருளும் (மத்.13/16). என் மாம்ச சிந்தைக்குரிய கண்களை மூடிப்போடும்.

2. ஆகாரின் கண்களைத் திறந்தவரே! மறைவாயிருப்பவைகளை காணத்தக்கவனாய் மாற்றும் - ஆதி 21/9

3. பிலேயாமின் கண்களைத் திறந்தவரே! உம் தீர்க்கதரிசன வார்த்தைகளை வெளிப்படுத்தும் - எண் 22/20 - 31

4. எம்மாவூர் சீஷர்களுக்கு அப்பத்தைப் பிட்டுக் கொடுத்து கண்களைத் திறந்தவரே! எம் கண்களையும் திறந்தருளும் - லூக் 24/ 31

**15. தாகம் தீர்க்க வாரும்**

1. லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளந்து சிம்சோன் தாகத்தைத் தீர்த்தவரே! எம் சரீரதாகம், ஆத்துமாவின் தாகம், ஆவியின் தாகம் தீர்க்க வாரும் ( நியா 15/10)

2. பெயர்செபா வனாந்தரத்திலே இஸ்மவேன் தாகத்தைத் தீர்த்தவரே! மரணக்கட்டிலும் உம் ஆவியால் விடுதலை பண்ணும் (ஆதி 21/19)

3. கன்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே! கன்மலையாம் கர்த்தரே! உம்மிடமிருந்து உம் ஆவியை எம் மேல் அளவில்லாமல் ஊற்றும் (எண் 20/8)

4. எயாவையும் விதவையையும் பஞ்சத்திலே பாதுகாத்த தேவன் எம்மையும் அப்படியே அற்புதமாகப் பாதுகாத்திடுவீராக - II இரா

5. ஜீவதண்ணீரால், ஜீவ ஊற்றால், ஜீவநதியால், ஜீவ நதிகளால் நிரப்பும் (யோ 7/38) (யோ 4/14)

## 16. ஜீவ தண்ணீரால் நிரப்பும்

1. கர்த்தாவே! ஜீவதண்ணீரால் எம்மை நிரப்பும் (யோ 4/14)
2. எம் பாத்திரம் ஜீவ தண்ணீரால் நிரம்பி வழிவதாக (சங் 23/5)
3. நித்தியகாலமாய் ஊறும் ஜீவ நீரூற்று எனக்குள் வருவதாக (யோ 4/14)
4. கர்த்தாவே! உம்முடைய சிங்காசனத்தில் இருந்து (உம்மிடத்திருந்து) வருகிற பளிங்கைப்போன்ற, சுத்தமான, தெளிவான, என்றும் தாகம் தீர்க்கிற ஜீவநதியால் எம்மை நிரப்பும் (வெளி 22/1)
5. கணுக்காலளவு, இடுப்பளவு, தலைக்கும் மேலாய் உம் ஜீவதண்ணீரால் நிரப்பும் (எசே 47/1-5)
6. கர்த்தாவே! எம் உள்ளத்தில் இருந்து ஜீவதண்ணீர் உள்ள நதிகள் புறப்பட்டு ஓடுவதாக (யோ 7/38)
7. நாங்கள் இருக்குமிடம், செல்லுமிடங்களில் ஆவியானவரால் அசைவுண்டாவதாக (அப் 4/31)

## 17. இந்நாமங்களின்படி கிரியை செய்யும்!

1. யெகோவா என்னும் நாமம் உடையவரே! ஸ்தோத்திரம். இருக்கிறேன் என்றவரே! நித்திய ஜீவன் தருபவராய், நித்தியமாய் யுத்தம் செய்பவராய் வாரும். (யாத் 3/14, 6/2)
2. சர்வ வல்லமையுள்ள தேவன் என்ற நாமம் உடையவரே! ஸ்தோத்ரம் (யாத் 6/3), கர்த்தாவே! உம் வல்லமைக்கு முன்பாக மற்ற தீயவல்லமைகள் (சாத்தான், மனுஷ, விஞ்ஞான, விஷ, வசிய) தோற்றுப்போவதாக.
3. ஏ என்னும் நாமம் உடையவரே! எலோயி என்னும் நாமம் உடையவரே! தேவாதி தேவனாய் மனுஷரால் கூடாதவைகளையும் செய்பவராய், விஞ்ஞானத்துக்கும் மேற்பட்டவராய் அதிசயமானவராய் செயல்படும் (மத் 27/46, மாற்கு 15/34)

4. அப்பா! பிதாவே! ஸ்தோத்ரம், பரமபிதாவே! ஸ்தோத்ரம். எங்கள் பரமதகப்பனாய், சுமப்பவராய், போஷிப்பவராய், காப்பவராய், கண்ணோக்குபவராய், ஆலோசனை கர்த்தராய் வாரும் தேவா! (ஏசா 46/4)

## 18. கர்த்தாவே! உம் நாமத்தின் வல்லமையை அனுப்பும்

கர்த்தாவே! இதோ உம் நாமத்துக்கு பயந்து உமக்கு முன்பாக முழங்கால்படியிட்டு சபையாய் ஜெபிக்கிறோம். வேதாளக்கட்டு, பாதாளக்கட்டு யாவையும் ஜெயிக்கவல்ல உம் நாமத்தின் வல்லமையை அனுப்பும். கர்த்தாவே உம் நாமத்திற்கு விரோதமாய் செயல்படும் சகல அசுத்த ஆவிகளின் நாமங்கள் உம் வல்லமையால் அடங்கிப் போவதாக. உம் நாமத்திற்கு விரோதமாய் செயல்படும் அந்திகிறிஸ்து நாமங்கள், அந்தகாரலோகாதிபதி நாமங்கள் உம் நாம வல்லமையால் உலகமெங்கும் அடங்கிப் போவதாக. அவைகள் உம் நாமத்திற்கு முன் செயல்படாமல் போவதாக. (பி 2/9-11)

## 19. கர்த்தாவே! உம் ஆவியால் ஆகக்கடவது

1. கர்த்தாவே! என் பலத்தால் ஆகாது - சகரியா 4/6
2. என் பணத்தால் ஆகாது - பிர 5/10
3. என் பராக்கிரமத்தால் ஆகாது - சக 4/6
4. என் புயத்தால் ஆகாது - சங் 44/3
5. என் சக்தியினால் ஆகாது - அப் 3/12
6. என் பக்தியினால் ஆகாது - அப் 3/12
7. என் நீதியினால் ஆகாது - யோபு 27/6
8. என் ஞானத்தால் ஆகாது - யோபு 5/13
9. என் சாமர்த்தியத்தினால் ஆகாது - உபா 8/17
10. என் குதிரையால் ஆகாது - நீதி 21/31
11. நாசியில் சுவாசமுள்ள மனுஷனால் ஆகாது - ஏசா 2/22
12. உம்மையல்லாமல் எங்களால் ஒன்றும் செய்யக் கூடாது - யோ 15/5
13. நீரே சகலத்தையும் தாங்குபவர் - ஏசாயா 41/10

கர்த்தாவே! உம் கிருபை, உம் இரக்கம், உம் புயம், உம் வல்லமை, உம் ஒத்தாசை, உம் ஆவியினால் வெற்றி உண்டாவதாக - ஆமென்.

**20. 7 காரியங்கள் செய்யும்**

1. சீரேசுநாதனே! பரிசுத்தரே! எம்மைப் பரிசுத்தப்படுத்தும் - எபி 2/11
2. திரியேகநாதனே! ஸ்தோத்ரம். பிதாவின் ஒத்தாசை, குமாரனின் ஒத்தாசை ஆவியானவரின் ஒத்தாசை கிடைப்பதாக - சங் 121/1
3. ஜெயம் கொடுக்கும் தேவா! ஸ்தோத்ரம். எல்லா யுத்தங்கள் மேலும் ஜெயம் தந்திட வந்திடும் - I கொரி 15/57
4. பாரேறு நீதனே! ஸ். எல்லா நீதியும் செய்ய வாசல் திறந்திடும் - மத் 3/15
5. பரமபொற்பாதனே! ஸ்தோத்ரம். உம் மகிமையால் எமை நிரப்பும். உம் மகிமையை ஆலயத்தில் காணச் செய்திடும் - ஆகாய் 2/7
6. நேரேறு போதனே! உம் சத்தியம், உம் ஆலோசனை, உம் போதகத்தால் வழிநடத்தும் - சங் 32/8
7. நித்திய சங்கீதனே! ஸ்தோத்ரம். நித்தியமாய் உமக்கு புதுப்புதுப்பாடல் பாடிட புதிய கிருபைகள் தந்திடும் - சங் 96/1

**21. 7 காரியங்கள் செய்திடும்**

1. ஆதிசர்வேசா! ஸ்தோத்ரம். எல்லாம் வல்லவராய் வெளிப்பட்டு எமக்கு எல்லாமாய் வாரும் - I கொரி 1/31
2. நேசனே! ஸ்தோத்ரம். நேசமாய் இரத்தம் சிந்தியவரே! ஸ். உம் நேசம், இரக்கம் இன்னும் எங்கள் மேல் இறங்குவதாக - II கொரி 12/9
3. அகிலப்பிரகாசனே! ஸ். உம் வெளிச்சம் எமக்குக் கிடைப்பதாக. எம்மை உம் வெளிச்சத்தால் நிரப்பி பிரகாசம் மேல் பிரகாசம் உள்ளவர்களாய் மாற்றி உம் சித்தமாய் பயன்படுத்தும் - எண் 6/25
4. நீதிபரனே! ஸ்தோத்ரம். எல்லா நீதிகளையும் நிறைவேற்ற எல்லா வழிகளையும் திறந்திட வந்திடும் - மத் 3/17
5. நித்தியகுணாளனே! ஸ்தோத்திரம். நித்தியமாய் இருக்கும் குணாளனே! பரிசுத்தப்படுத்தி நித்திய ஜீவன், நித்திய வாழ்வு, நித்திய வீடு தந்திடும். - யோவான் 14/2,3
6. குணாளனே! ஆவியின் கனிகள் உள்ளவனாய் மாற்றும். உம்மைப் பற்றிக் கொள்வேன். உம்மைப் போல் மாற்றும் - கலா 5/22,23
7. உயர்மனுவேலனே! எம்மோடிரும். எம்மைவிட்டு விலகாதிரும் - மத் 1/23 ஆமென்.

**22. 10 லட்சணம் தாரும்**

பத்து லட்சணத்தனே! ஸ்தோத்ரம். உம்மைப் போல்

1. சாந்தம் - மத் 11/29
2. மனத்தாழ்மை- மத் 11/29
3. பரிசுத்தம் - I பேது
4. தியாகம் - அப் 10/28
5. மன்னிக்கும் மாண்பு - லூக்கா 23/34
6. இரக்கம் - மத் 8/1-3
7. ஜெப ஆவி - மாற்கு 6/46
8. பரிசுத்த ஆவி - அப் 10/38
9. தேவசித்தம் செய்தல் - அப் 9/6
10. தேவனை மகிமைப்படுத்துதல் உள்ளவனாக்கும் - யோ 17/4

கர்த்தாவே! நீர் இந்த பூமியிலே மனுஷனைப் போல் பிறந்து வாழ்ந்து இந்த 10 லட்சணங்களை உடையவராய் இருந்தீரே! இதே இலட்சணங்கள் என்னுள் இருக்கத்தக்கதாக நாளுக்கு நாள் என்னைச் சீர்படுத்தும் - ஆமென்.

**23. உம் சித்தம் என்னில் நிறைவேற்றும்**

1. வந்தனம்! வந்தனம்! மிகத் தந்தனம் - லூக் 7/45
2. சந்ததம் சந்ததம் சரணம் செய்கிறோம் - மத் 28/9
3. உம் நாமத்துக்கு மங்களம், மங்களம் - பி 2/10,11
4. உம் நாமத்துக்கு ஜெயமங்களம் - I கொரி 15/57
5. உம் நாமத்துக்கு சுபமங்களம் - II கொரி 9/8
6. பொழுதெல்லாம் உம்மைத் தொழுகிறோம் - தானி 6/20
7. உம் பாதத்தில் விழுகிறோம் சாஷ்டாங்கமாய் - மத் 2/11
8. இதயத்தைத் தரைமட்டும் தாழ்த்துகிறோம் - யாக் 4/6
9. பாவத்தினை அறிக்கை செய்கிறோம் - நீதி 28/13
10. மனங்கசந்து அழுகிறோம் - மத் 26/75
11. பாவங்களை மன்னியும் - சங் 51/9
12. பாவத்தினின்று விடுதலை பண்ணும் - மத் 18/23 - 30

13. பாவி என்று தள்ளாதிரும் - லூக் 7/39

14. பிள்ளைகளாய் மாற்றிடும் - யோ 1/12

15. பரிசுத்தப்படுத்தும் - எபி 2/11

16. உம் கரம் நீட்டி ஆசீர்வதியும் - லூக் 24/50

17. உம் சித்தம் செய்ய உதவும் - மத் 7/21

18. உம் சுதந்தரத்தால் நிரப்பும் - சங் 16/5

19. உம் சர்வத்தால் நிரப்பும்- சங் 16/5

20. நீரே என் சொத்தாய் வாரும் - மத் 13/45

21. உம் சித்தம் என்னில் நிறைவேற்றும் - அப் 9/6 - ஆமென்.

24. அப்பா! ஸ்தோத்ரம் - ரோமர் 8/15
பிதாவே! சுபமங்களம் - ரோமர் 8/15
யெகோவா! ஜெயமங்களம் - யாத் 6/2
ஏலோயீ! மங்களம் - மாற்கு 15/34
ஏ ! சரணம் - மத் 27/46
நித்தியரே! புகழ்ச்சி - ஏசா 9/6
சத்தியரே! நித்தியகீர்த்தனம் - யோ 14/6
சர்வவல்லவரே! நித்திய ஸ்தோத்ரம் - ஆதி 35/11
எங்கும் நிறைந்தவரே! வாழ்க! - யோ 4/24
எல்லாம் அறிந்தவரே! - யோ 2/25
ஆவியாயிருப்பவரே! - யோ 4/24
திரியேக தேவா - மத் 28/19
பிதாகுமாரன் ஆவியே - மத் 28/19
ஆபிரகாமின் தேவா! - ஆதி 32/9
ஈசாக்கின் தேவா! - ஆதி 32/9
தாவீதின் தேவா! - மத் 1/1
யாக்கோபின் தேவா! - மத் 1/2
மோசேயின் தேவா! - யாத் 3/2
எந்தன் சிருஷ்டிகரே! - சங் 100/3
சகலமும் படைத்தவரே! - கொலோ 1/16
படைத்துக் கொண்டிருப்பவரே! - கொலோ 1/16
காத்துக் கொண்டிருப்பவரே! - சங் 17/8
தாங்கிக் கொண்டிருப்பவரே! - ஏசா 46/4

**25. ஜெயங்கொடுக்கும் தேவனாய் வாரும்**

1. கர்த்தாவே! மரணக்கட்டுகள் மேல் வெற்றியருளும் - சங் 18/4
2. பாதாளக்கட்டுகள் மேல் ஜெயம் தாரும் - சங் 18/5
3. வேதாளக்கட்டுகள் மேல் ஜெயம் தாரும் -
4. பெலவீனக்கட்டுகள் மேல் ஜெயம் தாரும் - லூக்கா 13/11,16
5. சாபக்கட்டுகள் மேல் ஜெயம் தாரும் - கலா 3/13
6. நிந்தைக்கட்டுகள் மேல் ஜெயம் தாரும் - ஏசா 25/8
7. வியாதிக்கட்டுகள் மேல் ஜெயம் தாரும் -
8. இயற்கையைக் கொண்டு சேதப்படுத்தும் கட்டுகள் மேல் ஜெயம் தாரும் -
9. செயற்கையைக் கொண்டு சேதப்படுத்தும் கட்டுகள் மேல் ஜெயம் தாரும் (உ.ம் தீ, மின்சாரம், கதிர்கள்) இக்கட்டுகளைக் கட்டிப்போடும் கர்த்தாவே! -

**26. புதிய காரியம் செய்யும்**

1. புது எண்ணையால் அபிஷேகியும் (புதுப்புது வரங்கள்) - சங் 92/10
2. புது பெலம் தாரும் (முன்னிருந்ததைவிட பெலம்) - ஏசாயா 40/31
3. புதுகிருபை (வேதத்திலுள்ள) தாரும் - புலம்பல் 3/23
4. புதியபாடல்கள் எழுத கிருபை தாரும் - சங் 98/1
5. புதிய இராகத்தோடு பாட உதவும் -
6. அழகாகப் பாட உதவும் - உன் 2/14
7. புதிய எருசலேமில் பங்கு தாரும் - வெளி 21/1
8. புது சிருஷ்டியாக்கும் - II கொரி 5/17
9. புது நன்மைகள் தாரும் - சங் 85/12
10. புதிய ஆசீர்கள் தாரும் - சங் 115/18
11. புதிய திறமைகள் தாரும் - மத் 25/15
12. புதிய ஞானங்கள் தாரும். -

**27. உமக்குள் வருபவர்கட்கு அடைக்கலமருளும்**

1. கர்த்தாவே! நீதியைப் பிரசங்கித்த நோவாவின் பிரசங்கம் கேட்டு மனந்திரும்பியவர்களை பேழையில் உயிரோடு காத்தீரே! இதோ! உம்மை விசுவாசித்து மனந்திரும்பி உம் கற்பனைகளுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்படிவோம். உம்மை மகிமைப்படுத்துவோம். எமக்கு பேழையாயிருந்து பெருவெள்ளம், சுனாமி, கடல்சீற்றம், கொள்ளை நோய்கள், கொள்ளையடிப்போர், பஞ்சங்கள், இயற்கை சீற்றங்கள், செயற்கை சீற்றங்கள், வானத்திருந்து வரும் தீமைகள்,

துன்மார்க்கர்களின் கொலை முயற்சிகள் யாவுக்கும் விலக்கிக் காப்பாற்றும் - II பேதுரு 2/5

2. தீமைக்குப் தப்புவிப்பேன் என்று சொல்வதற்கு அடையாளமாக வானவில்லை வைத்தீரே! 7 கண்களை உடையவரே! 7 ஆவிகள் உடையவரே! இஸ்ரவேல் 7 ஒளியானவரே! (VIBGYOR) எம்மோடு உடன்படிக்கை பண்ணும் - ஆதி 9/10- 17

**28. கர்த்தாவே! என் துன்ப காரணம் நிதானிப்பேனாக.**

1. கர்த்தாவே! என் மேல் வரும் துன்பங்கள் என் பாவத்தின் சம்பளமா என்பதை சோதிப்பேனாக - ரோமர் 6/23
2. கர்த்தாவே! எனக்கு வரும் துன்பங்கள் என் கவனக்குறைவினாலா என்பதை சோதிப்பேனாக - II இரா 6/1-7
3. கர்த்தாவே! எனக்கு வரும் துன்பங்கள் என் கடமை தவறுதனாலா என்பதை சோதிப்பேனாக - ஆதி 2/15; 3/1
4. எனக்கு வரும் துன்ப காரணம் பொல்லாத மனுஷர்களாலா என்பதை சோதிப்பேனாக - சங் 17/9
5. கர்த்தாவே! எனக்கு வரும் துன்பம் பொல்லாத ஆவிகளாலா என்பதை சோதிப்பேனாக - வெளி 12/12
6. கர்த்தாவே! எனக்கு வரும் துன்பங்கள் உம் தண்டனையினாலா என்பதை நிதானிப்பேனாக - யோபு 5/17

**29. எச்சரித்து நடத்தும் கர்த்தாவே.**

1. கர்த்தாவே! உம் வழிகளை விட்டு மாறும்போது எம்மை எச்சரித்திடும் (உறக்கத்தில்) - ஆதி 31/24
2. உம் வழிகளைவிட்டு மாறும்போது உம் ஊழியர் மூலம் சபையில் பேசி எச்சரியும் - எபி 12/25
3. எச்சரித்தும் கீழ்படியாத போது சிறிய தண்டனைகளை (சிட்சை) கொடுத்திடும் - எபி 12/5
4. சிட்சைக்குக் கீழ்படியாத கட்டத்தில் தண்டியும் - எபி 12/6
5. தண்டித்தும் கீழ்படியா கட்டத்தில் ஆக்கினிக்குட்படுத்தும் - ரோமர்8/1

என் ஆத்துமா வழுவிப் போகாதபடி, இடறிப்போகாதபடி, பின்வாங்கிப்போகாதபடி, மறுதத்துப் போகாதபடி, மரித்துப் போகாதபடி, கெட்டுப்போகாதபடி, கறைபிடித்துப் போகாதபடி, நாறிப்போகாதபடி என்னை எச்சரித்து நடத்தும். நித்திய வாழ்வை இழந்து போகாதிருப்பேனாக.

**30. உதவி செய்யும் கர்த்தாவே! (சங்.46/1; I சாமு 7/12)**

1. என் கடமைகளில்
2. என் வேலைகளில்
3. என் பணிகளில்
4. என் உழைப்புகளில்
5. என் பிரயாசங்களில்
6. என் சபையில்
7. என் பிரயாணத்தில்
8. என் ஊழியங்களில்
9. என் பேச்சுகளில்
10. என் எழுத்துகளில்
11. என் கேட்குதல்
12. என் முகர்தல்
13. என் புசிப்பில்
14. என் உறங்குதல்
15. என் நடைகளில்
16. என் வாழ்வில்
17. என் பார்த்தல்
18. என் கஷ்டங்களில்
19. என் நஷ்டங்களில்
20. என் எல்லாவற்றிலும்

**31. இவைகள் மூலம் போராடும் சாத்தானுக்குத் தப்புவியும் சங்121/7 லூக்.10/19**

1. காற்று
2. தண்ணீர்
3. தீ
4. மின்சாரம்
5. கதிர்கள்
6. செல்போன்
7. போன்
8. வாகனங்கள்
9. சர்ப்பங்கள்
10. தேள்கள்
11. விஷஜந்துக்கள்
12. விஷக்கிருமிகள்
13. வைரஸ்கள்
14. மிருகங்கள்
15. ஊர்வன
16. பூச்சிகள்
17. பறவைகள்
18. புழுக்கள்
19. தாவரங்கள்
20. உணவுகள்

**32. நோவாவைப் போல மாற்றும்**

1. 120 வருடங்கள் பொறுமையாகப் பிரசங்கித்தான் - ஆதி 6/3
2. பெரிய ஒரு பேழையை ஆயத்தம் பண்ணினான் (ஆலயகட்டுமான பணி செய்தான்) - ஆதி 6/14-16
3. உத்தமனாய் இருந்தான் - ஆதி 6/9
4. தேவனுடைய கண்களில் கிருபை பெற்றான் - ஆதி 6/8
5. வீட்டாரை கர்த்தருக்கென்று ஆயத்தம் பண்ணினான் - ஆதி 7/13
6. தேவன் சொன்னபடியெல்லாம் செய்தான் - ஆதி 6/22
7. கடுமையான உழைப்பாளியாய் இருந்தான் - ஆதி 6/22
8. சரீரப்பணியும் செய்தான். ஆத்மபணியும் செய்தான் - II பேதுரு 2/5
9. உலகசிநேகமற்றவனாய் இருந்தான் - II பேதுரு 2/5
10. பொல்லாத மக்களைப் பின்பற்றவில்லை - II பேதுரு 2/5
11. நன்றிப செலுத்தினான் - ஆதி 8/20
12. பலீடம் கட்டினான் - ஆதி 8/20
13. கர்த்தரைத் தொழுபவனாயிருந்தான் - ஆதி 6/9